காஷ்மீர்: பேருந்து கவிழ்ந்து ஐடிபிபி படையினர் 7 பேர் பலி

ஸ்ரீநகர், ஆக. 16: ஜம்மு-காஷ்மீரில் ஆற்றுப் பள்ளத்தாக்கில் செவ்வாய்க்கிழமை பேருந்து கவிழ்ந்த விபத்தில் இந்திய-திபெத் எல்லை காவல் படையை (ஐடிபிபி) சேர்ந்த 7 பேர் உயிரிழந்தனர். மேலும் 32 பேர் காயமடைந்தனர்.

அமர்நாத் யாத்திரை பாதுகாப்புப் பணி முடிந்து பேருந்தில் திரும்பிக் கொண்டிருந்தபோது, பஹல்காம் பகுதியில் இந்த துயர சம்பவம் நேரிட்டது. இதுதொடர்பாக, காவல்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

விபத்துக்குள்ளான பேருந்தில், ஐடிபிபி படையினர் 37 பேர் மற்றும் ஜம்மு-காஷ்மீர் காவல்துறையைச் சேர்ந்த இருவர் பயணித்தனர். இப்பேருந்து, சந்தன்வாரி மற்றும் பஹல்காம் இடையே சென்றுக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக ஆற்றுப் பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், ஐடிபிபி படையினர் 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். காயங்களுடன் மீட்கப்பட்ட மற்றவர்கள், அனந்த்நாக் மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி 5 பேர் உயிரிழந்தனர். மேலும் 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால், அவர்கள் மேல்சிகிச்சைக்காக ஸ்ரீநகருக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

ஜம்மு-காஷ்மீர் காங். பிரசாரக் குழு தலைவர் பதவியை ஏற்க குலாம் நபி ஆசாத் மறுப்பு

புது தில்லி /ஜம்மு, ஆக.16: ஜம்மு-காஷ்மீர் காங்கிரஸ் பிரசாரக் குழு தலைவராக முன்னாள் முதல்வர் குலாம் நபி ஆசாதை, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி செவ்வாய்க்கிழமை நியமித்த நிலையில், குலாம் நபி ஆசாத் அப்பதவியை ஏற்க மறுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசமாக மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட பின்னர் தொகுதி மறுவரையறை பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சட்டப்பேரவைத் தேர்தலை நடத்தும் வகையில் வாக்காளர் பட்டியல் தயாரிப்பு இறுதிநிலையை எட்டியுள்ளது.

இந்நிலையில், ஜம்மு-காஷ்மீரில் காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, குலாம் நபி ஆசாதுக்கு மிகவும் நெருக்கமான, விகார் ரசூல் வானியை ஜம்மு-காஷ்மீர் பிரதேசத்தின் புதிய காங்கிரஸ் தலைவராக நியமித்துள்ளார். ரமண் பல்லா செயல் தலைவராகவும், குலாம் நபி ஆசாத் பிரசாரக் குழு தலைவராகவும், துணைத் தலைவராக மக்கள் ஜனநாயக கட்சியின் முன்னாள் தலைவர் தாரிக் ஹமீத் காரா நியமிக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டனர்.

காங்கிரஸ் கட்சி தலைமையின் மீது அதிருப்தி கொண்ட ஜி-23 தலைவர்களில் குலாம் நபி ஆசாதும் ஒருவர்.

மாநிலங்களவையில் எதிர்க்கட்சி தலைவராக இருந்த அவருடைய எம்.பி. பதவிக் காலம் நிறைவடைந்த பிறகு அவருக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்படவில்லை. இந்த நிலையில், பிரசாரக் குழு தலைவராக அவரது பெயரை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி அறிவித்துள்ளார். ஆனால் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து சில மணி நேரத்தில், குலாம் நபி ஆசாத் அப்பதவியை ஏற்க மறுத்துவிட்டதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ் அமைப்புகள் மீதான தடை நீக்கம் ஏன்?

இலங்கை அரசு விளக்கம்

கொழும்பு, ஆக.16: 'பயங்கரவாதத்துக்கு நிதி அளிப்பதை நிறுத்திவிட்டதன் அடிப்படையிலேயே இலங்கையில் 6 தமிழ் அமைப்புகள் மற்றும் 316 தனி நபர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது' என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலிய தமிழர் பேரவை, உலகத் தமிழர் பேரவை, உலக தமிழ் ஒருங்கிணைப்புக் குழு, தமிழ் ஈழ மக்கள் கூட்டமைப்பு, கனடா தமிழ் காங்கிரஸ், பிரிட்டன் தமிழ்ப் பேரவை ஆகிய 6 அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் மீதான தடையை நீக்கி இலங்கை பாதுகாப்பு அமைச்சகம் திங்கள்கிழமை அறிவிக்கை வெளியிட்டது. இந்த அறிவிக்கை அரசிதழிலும் வெளியிடப்பட்டது.

இதுகுறித்து கேள்வி எழுப்பிய இலங்கை எதிர்க் கட்சிகள், தடை நீக்கத்துக்கான காரணத்தை அரசு தெரிவிக்க வேண்டும் என வலியுறுத்தின.

அதனைத் தொடர்ந்து, தடை நீக்கத்துக்கான விளக்கத்தை இலங்கை பாதுகாப்பு அமைச்சகம் அறிக்கையாக செவ்வாய்க்கிழமை வெளியிட்டது. அதில் கூறியிருப்பதாவது:

பயங்கரவாதத்துக்கு நிதியுதவி அளித்தலுக்கு எதிரான ஐ.நா. சபையின் ஒழுங்கு நடைமுறைகளின் கீழ் இலங்கையில் 577 தனி நபர்கள், 18 அமைப்புகள் கடந்த 2021-ஆம் ஆண்டு கருப்புப் பட்டியலில் வைக்கப்பட்டன.

இந்தத் தடையை மறு ஆய்வு செய்வது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் சார்பில் ஒரு குழு அமைக்கப்பட்ட கவனமான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், வெளியுறவு அமைச்சகம் மற்றும் இலங்கை மத்திய வங்கி அதிகாரிகள் ஆகியோருடன் தடைசெய்யப்பட்ட அமைப்புகள் பயங்கரவாத நடவடிக்கைகள் அல்லது பயங்கரவாதத்துக்குத் தொடர்ந்து நிதி அளிக்கின்றனவா என்பது குறித்து தொடர் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆலோசனைகள் மற்றும் ஆய்வு முடிவின் அடிப்படையில், பயங்கரவாதத்துக்கு நிதி அளிப்பதை நிறுத்திவிட்ட 6 தமிழ் அமைப்புகள் மற்றும் 316 தனி நபர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது' என்று விளக்கமளித்துள்ளது.

கடந்த 2014-இல் விடுதலைப் புலிகள் அமைப்பு உள்பட 16 தமிழ் அமைப்புகள் மீது அப்போதைய அதிபர் மகிந்த ராஜபட்ச தலைமையிலான அரசு தடை விதித்தது. 2015-இல் இலங்கை அதிபராக பொறுப்பேற்ற மைத்ரிபால சிறிசேன இந்தத் தடையை நீக்கினார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின்போது சூறையாடப்பட்ட தமிழர்கள் வசித்த பகுதிகளை மறுகட்டமைப்பு செய்வதற்கான பேச்சுவார்த்தையை தொடங்கிய நிலையில், இந்தத் தடையை சிறிசேனா அரசு நீக்கியது. இந்த நிலையில், 2021-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோத்தபய ராஜபட்ச அரசு, தமிழ் அமைப்புகள் மீது மீண்டும் தடை விதித்தது. பேச்சுவார்த்தைக்கும் மறுத்தது.

தற்போது, 6 தமிழ் அமைப்புகள் மீது தடை நீக்கப்பட்டிருப்பதற்கு இலங்கையின் பிரதான தமிழர் கட்சியான தமிழ் தேசிய கூட்டமைப்பு (டிஎன்ஏ) வரவேற்பு தெரிவித்துள்ளது.

தேசிய பாடத்திட்ட கணக்கெடுப்பில் மக்கள் தவறாது பங்கேற்க வேண்டும்

புது தில்லி, ஆக. 16: பள்ளிக்கல்வி குறித்து தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (என்சிஆர்டி) சார்பில் நடத்தப்படும் தேசிய பாடத் திட்டத்துக்கான எண்ம (டிஜிட்டல்) கணக்கெடுப்பில் (என்சிஎஃப்) மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் கோரிக்கைவிடுத்துள்ளார்.

நாட்டின் பள்ளிக்கல்விக்கான பாடத்திட்டம், பாடப்புத்தகம் மற்றும் கல்வி கற்பிக்கும் முறைமைகளை வடிவமைப்பதற்கான வழிக்காட்டியாக தேசிய கல்வித் திட்ட நடைமுறை (என்சிஎஃப்) உருவாக்கப்பட்டுள்ளது.

மத்திய கல்வி அமைச்சகம் மற்றும் என்சிஆர்டி மூலம் மேற்கொள்ளப்படும் தேசிய கல்வித் திட்ட எண்ம (டிஜிட்டல்) கணக்கெடுப்பு, என்சிஎஃப்-ஐ உருவாக்க மக்களின் கருத்தை பெறுவதற்காக நடத்தப்படுகிறது. இந்தக் கணக்கெடுப்பில் 5 வாய்ப்புகளுடன் கூடிய 10 கேள்விகள் இடம் பெற்றிருக்கும். கல்வியை நவீன மற்றும் திறன்சார் முறையில் உருவாக்குவதையும், நாட்டில் ஆசிரியர்களின் கண்ணியத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாக கொண்டு கேள்விகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பள்ளிக்கல்வியில் குழந்தைகளுக்கு கற்க வேண்டிய விழுமியங்கள், ஒன்றாம் வகுப்பிலிருந்து குழந்தைகள் கற்றுகொள்ள வேண்டிய மொழிகள், குழந்தைகளின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுக்கு ஆசிரியரின் பங்குகள் குறித்து மக்களின் கருத்தை அறிந்துகொள்ளும் வகையிலும் இந்தக் கேள்விகள் அமைந்திருக்கும்.

இது குறித்து மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், 'திடமான, ஆற்றல்மிக்க என்சிஎஃப் உலகப்பார்வையுடன் கலாசார மதிப்புகளை ஒருங்கிணைக்கவும், காலனியாதிக்கத்திலிருந்து நம் கல்வி அமைப்பை விடுவிக்கவும், இந்தியாவின் பெருமையை அடுத்ததலைமுறைக்கு கொண்டுசேர்க்கவும் மிகவும் இன்றியமையாதது. என்சிஎஃப்-க்கான குடிமக்கள் கணக்கெடுப்பில் அனைத்து மக்களும் தவறாது கலந்துகொள்ள வேண்டும். 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இலக்கை அடைய என்சிஎஃப் மற்றும் தேசிய கல்விக்கொள்கை-2020 முக்கியப்பங்காற்றும்' என குறிப்பிட்டிருந்தார்.

குஜராத்: பில்கிஸ் பானு பாலியல் வழக்கின் குற்றவாளிகள் விடுதலை

எதிர்க்கட்சிகள் கண்டனம்

புது தில்லி, ஆக.16: குஜராத்தில் 2002-இல் நிகழ்ந்த வகுப்புக் கலவரத்தின்போது, நடைபெற்ற பில்கிஸ் பானு பாலியல் வன்கொடுமை, கொலை வழக்கின் குற்றவாளிகள் 11 பேரை விடுதலை செய்த அந்த மாநில அரசின் முடிவுக்கு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

'பெண் சக்தி' குறித்து சுதந்திர தின விழாவில் பிரதமர் மோடி பேசிய சில மணி நேரத்தில், பாஜக ஆட்சி நடைபெறும் குஜராத்தில் பில்கிஸ் பானு பாலியல் வழக்கு குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதுதான் புதிய இந்தியாவின் உண்மை முகம் என்று எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்துக்குப் பிறகு நடைபெற்ற வகுப்புவாத கலவரத்தில் கர்ப்பிணியான பில்கிஸ் பானுவை பாலியல் வன்கொடுமை செய்து, மூன்று வயது குழந்தை உள்பட அவரது குடும்பத்தினர் 7 பேரைக் கொன்ற வழக்கின் குற்றவாளிகள் 11 பேர் தண்டனையை பூர்த்தி செய்ததால் குஜராத் அரசு திங்கள்கிழமை விடுவிப்பதாக அறிவித்தது. சிறையில் இருந்து செவ்வாய்க்கிழமை விடுதலையான அவர்கள் இனிப்புகள் வழங்கியும் மாலைகள் அணிவித்தும் வரவேற்கப்பட்டனர்.

இதுகுறித்து காங்கிரஸ் செய்தித்தொடர்பாளர் பவன் கெரா கூறுகையில், 'பாலியல் வன்கொடுமை, கொலை வழக்கின் குற்றவாளிகள் 11 பேரை விடுதலை செய்த நிகழ்வு, பெண்கள் மீது பாஜக அரசு கொண்டிருக்கும் மனநிலையை தெளிவுபடுத்துகிறது.

பெண்களின் பாதுகாப்பு, அதிகாரமளித்தல், கண்ணியப்படுத்தல் ஆகியவை குறித்து பிரதமர் மோடி பேசிய சில மணி நேரத்தில் பாலியல் வன்கொடுமை குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள். இது குறித்து பிரதமர் விளக்கமளிக்க வேண்டும்' என்றார்.

திரிணமூல் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் சாகேத் கோக்லே கூறுகையில், 'பில்கிஸ் பானுவின் குடும்பத்தையே கொலை செய்த 11 குற்றவாளிகள் விடுதலை செய்தது குறித்து யாரும் ஏன் பேசவில்லை?' என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

மஜ்லீஸ் கட்சியின் தலைவர் அசாதுதீன் ஒவைசி, 'பெண்களின் கண்ணியத்தை குறைக்கும் வகையில் எதுவும் செய்ய மாட்டோம் என சுதந்திர தின விழாவில் நாட்டு மக்களை உறுதிமொழி ஏற்க கூறினார் பிரதமர். அதற்கு மாறாக அவரது கட்சி குஜராத்தில் குற்றவாளிகளை விடுவித்துள்ளது' என்றார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் எம்.பி. தானிஷ் அலி, 'நீதிக்கும் வாக்குறுதிக்கும் நிறைய இடைவெளி உள்ளதை இந்த விடுதலை வெளிப்படுத்துகிறது. இதை உலகமே கவனித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் புதிய இந்தியாவில் இதுகுறித்து யாரும் கவலைப்படுவதில்லை' என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, 'அரசியலால் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். எங்கள் சித்தாந்தத்துக்காக நாங்கள் கைது செய்யப்பட்டோம்' என்று விடுதலை பெற்ற 11 பேரில் ஒருவரான சைலேஷ் பட் தெரிவித்தார். இந்த வழக்கின் குற்றவாளிகள் விடுதலை குறித்து செய்தி மூலம்தான் தெரிந்து கொண்டேன் என்றும் அவர்கள் எப்போது மாநில அரசை அணுகினார்கள் என்பது தெரியாது என்றும் பில்கிஸ் பானுவின் கணவர் யாகூப் ரசூல் கூறினார்.

முன்னதாக, பில்கிஸ் பானு வழக்கில் 11 பேரை குற்றவாளிகளாக மும்பை சிபிஐ சிறப்பு நீதிமன்றம் 2008-இல் குற்றவாளிகளாக தீர்ப்பளித்தது. இந்த உத்தரவை மும்பை உயர்நீதிமன்றமும் உறுதி செய்தது. இதையடுத்து அவர்கள் சிறைத் தண்டனை அனுபவித்து வந்தனர்.

குஜராத் கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தில் 59 கரசேவகர்கள் உயிரிழந்தனர். அதன் பின்னர் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தில் 790 முஸ்லிம்களும், 254 ஹிந்துக்களும் உயிரிழந்தனர். 2,500 பேர் காயமடைந்தனர். 223 பேருக்கும் அதிகமானோர் காணாமல் போயினர். அப்போது குஜராத் முதல்வராக இருந்த மோடி மீது எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றன.

கலாநிதி மாறன்-ஸ்பைஸ்ஜெட் இடையிலான பிரச்னைகளுக்கு மத்தியஸ்தம்

உச்சநீதிமன்றம் பரிசீலிக்க முடிவு

புது தில்லி, ஆக.16: சன் குழுமத் தலைவர் கலாநிதி மாறன், ஸ்பைஸ்ஜெட் இடையிலான அனைத்து பிரச்னைகளுக்கும் சுமுகமாக தீர்வு காண மத்தியஸ்தம் செய்யும் கோரிக்கையை உச்சநீதிமன்றம் பரிசீலிக்கவுள்ளது.

கடந்த 2020-ஆம் ஆண்டு கலாநிதி மாறன் மற்றும் அவரின் கேஏஎல் விமான நிறுவனம், ஸ்பைஸ்ஜெட் விமான நிறுவனம் இடையிலான பங்கு பரிவர்த்தனை தொடர்பான வழக்கை தில்லி உயர்நீதிமன்றம் விசாரித்தது. அப்போது பங்கு பரிவர்த்தனை தகராறில் சுமார் ரூ.243 கோடியை வட்டியாக நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று ஸ்பைஸ்ஜெட் நிறுவனத்துக்கு தில்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து ஸ்பைஸ்ஜெட் நிறுவனம் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தது. அந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், தில்லி உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதித்தது.

அந்த மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா தலைமையிலான அமர்வு முன்பாக செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது கலாநிதி மாறன் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் விகாஸ் சிங் வாதிடுகையில், "கலாநிதி மாறன், ஸ்பைஸ்ஜெட் இடையிலான பங்கு பரிவர்த்தனை உள்பட அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வு காண தெலங்கானா மாநிலம் ஹைதராபாத் மத்தியஸ்த மையத்தில் இருதரப்புக்கும் இடையே மத்தியஸ்தம் செய்யலாம்" என்று ஆலோசனை கூறினார். அதனை இருதரப்பினரும் ஏற்றுக் கொண்டனர்.

இதையடுத்து மத்தியஸ்தம் தொடர்பான கோரிக்கையை பரிசீலிப்பதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

சிவமொக்கா மோதல் விவகாரம்: கத்தியால் குத்திய நபரை சுட்டுப் பிடித்த போலீஸார்

சிவமொக்கா, ஆக. 16: சுதந்திர தின விழாவில் வீரசாவர்க்கர் மற்றும் திப்பு சுல்தான் உருவப் படங்கள் கொண்ட பதாகைகளை வைப்பது தொடர்பாக சிவமொக்காவில் இருதரப்புக்கு இடையே நடந்த மோதலில் இளைஞர் ஒருவரை கத்தியால் குத்திய நபரை போலீஸார் துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தனர்.

சிவமொக்காவில் ஆக.15-ஆம் தேதி நடந்த சுதந்திர தின விழாவின்போது, அமீர் அகமது சதுக்கத்தில் வீரசாவர்க்கர், திப்புசுல்தான் உருவப்படங்கள் அடங்கிய பதாகைகளை வைத்திருந்ததற்கு முஸ்லிம் மற்றும் ஹிந்து மதத்தை சேர்ந்தவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். முன் அனுமதியில்லாததால் பதாகைகளை வைக்க போலீஸார் அனுமதி அளிக்கவில்லை. எனினும், இது தொடர்பாக இது தரப்புக்கு இடையே மோதல் ஏற்பட்டது. கூட்டத்தைக் கலைக்க போலீஸார் லேசான தடியடி நடத்தினர்.

இந்த சூழ்நிலையில், ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த கார்மென்ட்ஸ் தொழிலாளியான பிரேம் சிங் (20) என்பவரை சூழ்ந்த கும்பலைச் சேர்ந்த நபர் கத்தியால் குத்தினார். இதில் வயிற்றுப்பகுதியில் படுகாயமடைந்த பிரேம் சிங், அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இதனிடையே, சிவமொக்கா மற்றும் பத்ராவதியில் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்நகரங்களில் செவ்வாய்க்கிழமை பள்ளிகள், கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது. மேலும் மதுக்கடைகள் திறக்க தடை விதிக்கப்பட்டது.

இதனிடையே, 144 தடையுத்தரவு அமலில் இருக்கும் சூழ்நிலையில், பத்ராவதியில் பஜ்ரங் தள் தொண்டர் சுனில் என்பவர், முபாரக் என்பவரால் தாக்கப்பட்டார். இதில் மோசமாக காயமடைந்த சுனில், அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார். முபாரக்கை போலீஸார் கைது செய்துள்ளனர். இந்த இரு சம்பவங்களாலும் சிவமொக்கா, பத்ராவதியில் பதற்றமான சூழ்நிலை காணப்படுகிறது.

இந்நிலையில், சிவமொக்காவில் செவ்வாய்க்கிழமை பிரேம் சிங்கை கத்தியால் குத்திய முகமது ஜபியுல்லா(எ) சர்பியை (30) பிடிக்க போலீஸார் முயன்றனர். அப்போது போலீஸாரைத் தாக்கி ஜபியுல்லா தப்ப முயன்றார்.

இந்தநிலையில், தற்காப்புக்காக வினோபா நகர் காவல் நிலையத்தின் துணை ஆய்வாளர் மஞ்சுநாத் எஸ்.குரி, முகமது ஜபியுல்லாவை அவரது வலதுகாலில் துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தார். காலில் படுகாயமடைந்த முகமது ஜபியுல்லா, அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பிரேம் சிங்கை கத்தியால் குத்திய வழக்கில் முகமது ஜபியுல்லா தவிர, நதீம், தன்வீர், அப்துல் ரகுமான் ஆகியோரை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

இது குறித்து கூடுதல் டிஜிபி (சட்டம்-ஒழுங்கு) அலோக்குமார் கூறுகையில், 'இரு தரப்புக்கும் இடையே நடந்த மோதலில் கத்தியால் குத்தப்பட்ட பிரேம் சிங், மோதலில் ஈடுபடாதவர். இந்த வழக்கில் 4 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர். இவர்களிடம் விசாரணை நடத்தி வருகிறோம். எதற்காக கத்தியால் குத்தினர்? இவர்களின் பின்னணி என்ன? கொள்கை என்ன? என்பது குறித்து விசாரித்து வருகிறோம். அடுத்த 3 நாள்களுக்கு சிவமொக்காவில் பாதுகாப்பு தீவிரமாக பலப்படுத்தப்படும். நிலைமையை ஆராய்ந்த பிறகு, அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுப்போம்' என்றார்.

சிவமொக்காவில் அமைதியை நிலைநாட்ட சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக முதல்வர் பசவராஜ் பொம்மை, செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் கூறினார்.

சிவமொக்கா மோதலைத் தொடர்ந்து, உடுப்பியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. உடுப்பி, பிரம்மகிரி சதுக்கத்தில் சுதந்திர தினவிழாவை முன்னிட்டு வீரசாவர்க்கர் உருவப்படம் கொண்ட பதாகை நிறுவப்பட்டுள்ளது. அங்கு பாதுகாப்புக்காக போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

ICICI Home Finance

ICICI ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம் ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்., ICICI HFC டவர், அந்தேரி குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு) மும்பை – 400 059 இந்தியா

கிளை அலுவலகம் : ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்., லயன் ஆர்கேட், 1A, 1 வது தளம், மதுரை சாலை, மேற்கு தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி - 627 001

(பார்க்க விதி 8 (6) க்கான விதி விலக்கு)

அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 உடன் படிக்க பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்ட / கடன் பொறுப்புக்கு உட்படுத்தப்பட்டு, ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட். - ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் இயற்சுவாதீனம் எடுக்கப்பட்ட அசையாச்சொத்துக்கள் 'இருக்கின்ற இடத்தில்' ''இருக்கின்ற நிலையில்' மற்றும் ''இருக்கின்றவற்றுடன்' என்ற அடிப்படையில் இதன் கீழ்க்குறிப்பிட்ட சுருக்கமான விபரங்களின் படி விற்பனை செய்யப்படும்.

வ. எண்	கடன்தார ர்(கள்) / கூட்டுகடன்தார ர்கள் / ஜாமீன்தாரர்களின் பெயர் / கடன் கணக்கு எண்.	அடமானச்சொத்து விபரங்கள் (தெரிந்த வில்லங்கங்களுடன்) (ஏதேனும் இருப்பின்)	நிலுவை தொகை (ரூபாயில்)	அடிப்படை விலை / டேவணித்தொகை	சொத்து ஆய்வு தேதி - நேரம்	ஏல தேதி & நேரம்
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)
1	செல்வ முத்து கிருஷ்ணன் B (கடன்தாரர்) ஜெயசங்கரி K (கூட்டு கடன்தாரர்) / கடன் கணக்கு எண். NHTVI00000848520	சர்வே எண். 1059/1, குலவணிகபுரம் கிராமம், மேலபாளையம் சார்பதிவகம், திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மாவட்டம் - 627 801	05 ஆகஸ்ட் 2022 ம் தேதியின் படி ரூ. 15,02,296/-	ரூ. 11,44,266/- ரூ.1,14,427/-	14 – செப்டம்பர் 2022 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை	20 - செப்டம்பர் - 2022 பிற்பகல் 02.00 மணி முதல் 03.00 மணி வரை

ஆன்லைன் ஏலமானது, ஏல முகமை க்ளோபல் டெக் ன் வலைதளம் (URL Link https://BestAuctionDeal.com) ல் நடைபெறும். மொத்த நிலுவைத்தொகைகளை மேற்கொண்டு வரும் வட்டியுடன் சேர்த்து 2022 செப்டம்பர் 19 ம் தேதி மாலை 05.00 மணிக்கு முன்பு வரை செலுத்த அடமானதாரர் / இவ்வறிவிப்பு வழங்கப்பெற்றவர் ஆகியோருக்கு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது., தவறும் பட்சத்தில் இந்த ஜாமீன் சொத்துக்கள் பட்டியலிட்டவாறு விற்பனை செய்யப்படும். விலைகோர உத்தேசித்துள்ளோர் / வாங்குவோர், RTGS / கேட்பு வரைவோலையாக எடுக்கப்பட்ட மேற்சொன்ன டேவணித்தொகையுடன் (களம் ''E'' ல் குறிப்பிட்டவாறு) கூடிய விலைப்புள்ளிகளை ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்., லயன் ஆர்கேட், 1A, 1 வது தளம், மதுரை சாலை, மேற்கு தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி - 627 001 ல் 2022 செப்டம்பர் 19 ம் தேதியன்று மாலை 04.00 மணிக்கு முன்பே, சமர்ப்பிக்க வேண்டும்., விருப்பமுள்ள ஏலதாரர்(கள்) தங்களது விலைப்புள்ளிகளை வலைதளம் மூலம் சமர்ப்பிக்க இயல வில்லையெனில், தமது கையொப்பமிட்ட விலைப்புள்ளி ஆவணங்களை ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்., லயன் ஆர்கேட், 1A, 1 வது தளம், மதுரை சாலை, மேற்கு தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி - 627 001 என்ற முகவரிக்கு 2022 செப்டம்பர் 19 ம் தேதியன்று மாலை 05.00 மணிக்கு முன்பே கிடைக்குமாறு அனுப்பலாம் என்பதை தயவு கூர்ந்து அறியவும். டேவணித்தொகையானது. கேட்பு வரைவோலையாக (DD) ஏதேனும் தேசியமயமாமாக்கப்பட்ட / பட்டியலிடப்பட்ட வங்கியில் ''ICICI HOME FINANCE COMPANY LIMITED'' என்ற பெயரில் திருநெல்வேலியில் செலுத்தக்கவாறு எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேலும், சொத்து ஆய்வு, ஏலம் அல்லது விலைப்புள்ளி சமர்ப்பிப்பு தொடர்பாக ஏதேனும் விபரங்கள் தேவைப்படுமாயின், ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் ன் அலைபேசி எண்கள் 70210 72869 அல்லது NexXen Solutions Private Limited யை தொடர்பு கொள்ளலாம். அதிகாரப்பூர்வ அலுவலர், எந்த காரணமும் குறிப்பிடாமல் எந்த ஒரு அல்லது அனைத்து ஏலம் / விலைப்புள்ளியை தள்ளுபடி செய்யவோ, ஏற்றுக்கொள்ளவோ உண்டான உரிமையை தன்னகத்தே வைத்துள்ளார். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வலைதளம் https://www.icicihfc.com/ யை தயவு கூர்ந்து பார்வையிடவும்.

தேதி : 2022 ஆகஸ்ட் 17
இடம் : திருநெல்வேலி

அதிகாரப்பூர்வ அலுவலர்
ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

கனரா வங்கி

மண்டல அலுவலகம் : திருநெல்வேலி
பிக்பஜார் பில்டிங் 2-ம் தளம், புதிய பேருந்து நிலையம் எதிரில்,
பெருமாள்புரம், திருநெல்வேலி-627 007

இ-ஏல விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டம் 2002-ன் கீழ்

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் உடன் படிக்க – பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) க்கான விதி விலக்கு &- ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(களுக்கும்) ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, கனரா வங்கி அதிகாரப்பூர்வ அலுவலரால் ஆக்கபூர்வ சுவாதீனம் / இயற்சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்து, கனரா வங்கியின் கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(களிடமிருந்து) இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத்தொகைகளை வசூலிப்பதற்காக "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற நிபந்தனையின் பேரில் 20.09.2022 அன்று விற்பனை செய்யப்படும்.

தென்காசி கிளை கடன்தாரர் பெயர் 1. M/s.அருணா ரைஸ் மில், அதன் பிரதிநிதியாக உரிமையாளர் திரு.C .அன்பழகன், கதவு எண் 13/2 குருசாமிபுரம், பாவூர்சத்திரம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், தென்காசி மாவட்டம். 2) திரு.C.அன்பழகன் (நிறுவன உரிமையாளர் மற்றும் உரிமையாளர்), கதவு எண் 13/2 குருசாமிபுரம், பாவூர்சத்திரம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், தென்காசி மாவட்டம். 10/08/2022 அன்றுள்ளபடி மொத்த கடன் பொறுப்புகள்: ரூ. 324,96,623/- (ரூபாய் முந்நூற்று இருபத்து நான்கு லட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து அறுநூற்று இருபத்து மூன்று மட்டும்) + மேலும் வட்டி 31/07/2022 முதல். அசையும் சொத்துக்கள் முழுவிவரம்: M/s. அருணா ரைஸ் மில் கணக்கில் சுவாதீனத்தில் எடுக்கப்பட்ட அசையும் இயந்திரத்தளவாடங்கள் பொருள்களின் பட்டியல்:விறகு பயன்படுத்தும் உலை, மோட்டாருடன் கூடிய பக்கெட் ஏற்றி, அழுத்தும் வரைவு அமைப்புடன் உலர்த்தி, டஸ்ட் ரிமூவருடன் கூடிய ஹாப்பர், மோட்டாருடன் கூடிய பக்கெட் ஏற்றி, நெல் ஹல்லர் கூடிய ஹாப்பர், மோட்டாருடன் கூடிய பக்கெட் ஏற்றி, உமி/தவிடு பிரிப்பான், மோட்டாருடன் கூடிய பக்கெட் ஏற்றி, நெல் மற்றும் அரிசி பிரிப்பான், மோட்டாருடன் கூடிய பக்கெட்ஏற்றி, ஒயிட்னர்,மோட்டாருடன் கூடிய பக்கெட் ஏற்றி, பாலிஷர், மோட்டாருடன் கூடிய பக்கெட் ஏற்றி, கல் பிரிப்பான், மோட்டாருடன் கூடிய பக்கெட் ஏற்றி தரமான அரிசி பிரிப்பான், கலர் பிரிப்பான், ஏர் கம்ப்ரசர், மோட்டாருடன் கூடிய பக்கெட்ஏற்றி, தவிடு பவுடரிங் செய்வதற்கான உடைப்பான், மின்சார மோட்டார் பொருத்தப்பட்ட ஹாப்பர், டஸ்ட் சேகரிப்பு அளவு: தலா ஒன்று

அடிப்படை விலை : ரூ.9,60,000/- முன் வைப்பு தொகை : ரூ.96,000/-

நாகர்கோயில் KP சாலை கிளை கடன்தாரர் பெயர் M/s பிரீமியர் சயின்டிஃபிக் உரிமையாளர்: திரு.அமல்ராஜன் B 406, தளவாய்புரம் சாலை, மேலராமன்புதூர் நாகர்கோவில்-629004.கடன் தாரர் திரு.அமல்ராஜன் B S/o பாகுல் தாசர், 406, தளவாய்புரம் சாலை, மேலராமன்புதூர், நாகர்கோவில் 629004. ஜாமீன்தாரர் திருமதி.சாந்தினி செல்வி W/o அமல்ராஜன் B, 406, தளவாய்புரம் சாலை, மேலராமன்புதூர், நாகர்கோவில் 629004. 17/01/2022 அன்றுள்ளபடி மொத்த கடன் பொறுப்புகள்: ரூ.16,04,408.72/ (ரூபாய் பதினாறு இலட்சத்து நான்காயிரத்து நானூற்று எட்டு மற்றும் பைசா எழுபத்திரண்டு மட்டும்) சொத்து விவரம் உரிமைப் பத்திரம் வைத்திருப்பவர் திருமதி சாந்தினி செல்வி கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி பதிவு மாவட்டம், தோவாளை துணை மாவட்டம், தோவாளை தாலுகா, தோவாளை கிராமம், RS.எண்.326/1, சொத்தின் அளவு: 7 சென்ட் 094 ச.லிங்க்ஸ் காலி மனை மற்றும் கீழே கொடுக்கப்பட்டுள்ள எல்லைக்குள் எல்லைகள் வடக்கு: செண்பகராமன்புதூர் கிராம எல்லை கிழக்கு: மனை எண்: 155 மற்றும்156 LHL நகர் தெற்கு: மனை எண்:LHL நகர் 149 மேற்கு: 20 அடி அகல வடக்கு தெற்கு பாதை

அடிப்படை விலை : ரூ.14,19,000/- முன் வைப்பு தொகை : ரூ.1,41,900/-

விரிவான ஏல விற்பனை விதிமுறை நிபந்தனைகளுக்கு பின்வரும் கனரா வங்கி இணையதளத்தில் (www.canarabank.com) உள்ள "E-Auction" எனும் இணைப்பிலும் பார்க்கவும் அல்லது எந்தவொரு பணி நாளிலும் பணி நேரத்தில் அணுகவும்: அந்தந்த கிளை அதிகாரபூர்வ அலுவலர், கனரா வங்கி, அல்லது மண்டல அலுவலகம் திருநெல்வேலி, (தொ.பே:02462-2555073,2555083)

ஏல தேதி : 20.09.2022 முன் வைப்பு தொகை (EMD) : 19.09.2022 மாலை 04.00 மணி அல்லது அதற்கு முன்பு செலுத்தப்பட வேண்டும்.

நாள்: 16.08.2022
இடம்: திருநெல்வேலி

அதிகாரப்பூர்வ அலுவலர்,
கனரா வங்கி

CUB

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
கடன் மற்றும் வசூல் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612001
e-mail: crmd@cityunionbank.in, Tel: 0435-2432322, Fax: 0435-2431746

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் / நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் படி டெண்டருடன் கூடிய

மறு ஏல விற்பனை அறிவிப்பு

சிட்டி யூனியன் வங்கியின் கடன்தாரர் / ஜாமீன்தாரர்களாகிய 1. M/s. லியோரா கார்மெண்ட்ஸ், 15/51-A6, ஜீசஸ் பவன், அரசுவிளை நகராட்சி அலுவலகம் அருகில், தக்கலை அஞ்சல், கன்னியாகுமரி-629175. 2.திரு.C.B.அலெக்சாண்டர் தேவ், த/பெ.C.A ஜார்ஜ், 15/51-A6, ஜீசஸ் பவன், அரசுவிளை, நகராட்சி அலுவலகம் அருகில், தக்கலை அஞ்சல், கன்னியாகுமரி-629175. 3.திருமதி.சவிதா, க/பெ.C.B அலெக்சாண்டர் தேவ், 15/51-A6, ஜீசஸ் பவன், அரசுவிளை, நகராட்சி அலுவலகம் அருகில், தக்கலை அஞ்சல், கன்னியாகுமரி-629175 ஆகியோர் பெற்ற கடன் நிலுவை தொகை 10.08.2022 அன்றுள்ளபடி ரூபாய்.27,01,198/- (ரூபாய் இருபத்து ஏழு லட்சத்து ஓராயிரத்து நூற்று தொண்ணூற்று எட்டு மட்டும்) மற்றும் 11.08.2022 முதல் பின்வட்டி இதர செலவுகள் ஆகிய மொத்த தொகையை வசூலிக்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை 2002 ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம் விதி 8(6) 9 இன் கீழ் சிட்டி யூனியன் வங்கியின் அதிகாரப்பூர்வ அதிகாரி அவர்களால் சீலிடப்பட்ட டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அடிப்படையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு 1: எங்களது 391-வது மார்த்தாண்டம் கிளையில் 1-வது நபர் வேண்டுகோள்படியும், 2-ஆம் நபர் உரிமையாளராக இருப்பதாலும், 2&3-ஆம் நபர் இணை விருப்பதாரராக இருப்பதாலும், 2-ஆம் நபர் பிணையதாரராக இருப்பதாலும் 30 செப்டம்பர் 2019 அன்று (CUB OSL SPECIAL-BR:501812080056829) என்கிற கடன் கணக்கில் ரூபாய் 7,90,000/-, ஆண்டு வட்டி 14.00 % நிதி உதவி வழங்கப்பட்டு இந்த கணக்கானது 30 நவம்பர் 2020 அன்று செயல்படாத கணக்காக வகைப்படுத்தப்பட்டு 10.08.2022 வரையிலான நிலுவைத் தொகை ரூபாய்11,96,656/- (ரூபாய் பதினோறு லட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து அறுநூற்று ஐம்பத்து ஆறு மட்டும்) மற்றும் மேல் வட்டி, அபராத வட்டி 2 %, மாத இருப்புக்கான வட்டியுடன் 11.08.2022 முதல் முழுத் தொகையையும் திருப்பி செலுத்தும் காலம் வரையில்.

குறிப்பு 2: எங்களது 391-வது மார்த்தாண்டம் கிளையில் 1-வது நபர் வேண்டுகோள்படியும், 2-ஆம் நபர் உரிமையாளராக இருப்பதாலும், 2&3-ஆம் நபர் இணை விருப்பதாரராக இருப்பதாலும் 31 டிசம்பர் 2019 அன்று (CUB OSL SPECIAL-BR:501812080059915) என்கிற கடன் கணக்கில் ரூபாய்2,08,000/-, ஆண்டு வட்டி 16.00 % நிதி உதவி வழங்கப்பட்டு, இந்த கணக்கானது 30 நவம்பர் 2020 அன்று செயல்படாத கணக்காக வகைப்படுத்தப்பட்டு 10.08.2022 வரையிலான நிலுவைத் தொகை ரூபாய்3,29,129/- (ரூபாய் மூன்று லட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து நூற்று இருபத்து ஒன்பது மட்டும்) மற்றும் மேல் வட்டி, அபராத வட்டி 2%, மாத இருப்புக்கான வட்டியுடன் 11.08.2022 முதல் முழுத் தொகையையும் திருப்பி செலுத்தும் காலம் வரையில்.

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களின் விபரம்
C.B.அலெக்சாண்டர் தேவ் அவர்களுக்கு சொந்தமான சொத்து

சொத்து விவரம்: கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பதிவு மாவட்டம், கொல்லங்கோடு சார் பதிவு மாவட்டம், விளவங்கோடு தாலுக்கா, ஆத்தேன்கோட் (முன்னாள் குல்லாபுரம்) கிராமம், மறு சர்வே எண்.448/17, பழைய சர்வே எண்.3193. இதற்கு உட்பட்ட 20 சென்ட் நிலம் அதனுடன் கூடிய வசதிகள் உட்பட நான்கு எல்லைகள்: **கிழக்கில்:** சசிதரன் நாயர் & துளசிதரன் சொத்து, **தெற்கில்:** ரோடு, **மேற்கில்:** ஐய்யப்பன் ஐசுதாஸ் சொத்து, **வடக்கில்:** சந்திரசேகரன் நாயர் மீதமுள்ள சொத்து.

நிர்ணயிக்கப்பட்ட விலை: ரூ.32,00,000/- (ரூபாய் முப்பத்து இரண்டு லட்சம் மட்டும்)

டெண்டருடன் கூடிய மறு ஏல விற்பனை விபரம்

மறு ஏல தேதி	ஏலம் நடைபெறும் இடம்
05.09.2022	சிட்டி யூனியன் வங்கி லிமிடெட் மார்த்தாண்டம் கிளை, பம்மம் மெயின் ரோடு குழித்துறை நகராட்சி, மார்த்தாண்டம், கன்னியாகுமரி - 629165 போன்: 04651-272738 செல்: 9382270102

டெண்டருடன் கூடிய மறு ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

(1) விருப்பமுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர், ஏலத்தில் பங்கு கொள்ள நேரில் ஆஜராக வேண்டும் மற்றும் தனக்காக ஏலம் கேட்பதாக எழுத்துப்பூர்வமான ஒரு உறுதிமொழியையும் அளிக்க வேண்டும். (2) விருப்பம் உடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்க விரும்புவோர் படிவங்களை மேனேஜர், சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், மார்த்தாண்டம் கிளை, பம்மம் மெயின் ரோடு, குழித்துறை நகராட்சி, மார்த்தாண்டம், கன்னியாகுமரி - 629165 விலாசத்தில் பெறலாம். (3) விருப்பமுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் தங்களது விலை புள்ளிகளை நிர்ணயிக்கப்பட்ட டெண்டர் படிவத்தில் சீலிடப்பட்ட உறைகளில் வைத்து அத்துடன் சிட்டி யூனியன் வங்கி லிமிடெட் என்கின்ற பெயரில் பெறப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச விலையின்10% தொகையை பே ஆர்டர் / கேட்பு வரைவோலையினை பிணைவைப்புத் தொகையாக இணைத்து அதிகாரப்பூர்வ அதிகாரி சிட்டி யூனியன் வங்கி லிமிடெட் என முகவரிட்டு இங்கு அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருடன் கூடிய மறு ஏல விற்பனை தேதியன்று மதியம் 01:00 மணி அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும். (4) விருப்பமுள்ள டெண்டர்தாரர் ஏலம் கேட்பவர் சொத்துக்களை பார்வையிடவும் மற்றும் இதர விபரங்களுக்கும் போன்: 04651-272738 செல் எண். 9382270102 - ஐ தொடர்பு கொள்ளவும். (5) இந்த சொத்துக்கள் "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவட்டுடன்" என்கிற நிலையில் விற்பனை செய்யப்படும். (6) சீலிடப்பட்ட டெண்டர்கள் விருப்பமுள்ள டெண்டர் தாரர்கள் முன்னிலையில் இங்கு அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருடன் கூடிய மறு ஏல விற்பனை தேதி அன்று மதியம் 02.00 மணிக்கு திறக்கப்படும். பொதுவாக மூடப்பட்ட நிலையிலான டெண்டர் விற்பனையாக இருந்தபோதிலும், மூடப்பட்ட நிலையிலான டெண்டரில் குறிப்பிடப்பட்டுள்ள விலையைக் காட்டிலும் கூடுதலாக ஏலம் கோர விரும்புவோர்களின் விருப்பத்தின் பேரில் அதிகாரப்பூர்வ அதிகாரியின் கட்டளையின் பேரில் வெளிப்படையான திறந்த ஏலத்தினை நடத்திடலாம். இந்த நிலையில் அதிக பட்சம் ஏலம் கேட்பவருக்கு இந்த விற்பனை வழங்கப்படும் எனினும் இந்த விற்பனை சிட்டி யூனியன் வங்கியின் உறுதி செய்யப்பட வேண்டும். (7) வெற்றி பெறும் டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் விற்பனை நிலையில் 25% தொகையை (பிணை வைப்புத்தொகை செலுத்தியது உள்பட) விற்பனை உறுதி செய்யப்பட்ட உடனேயே செலுத்த வேண்டும். மீதி 75% தொகையை விற்பனை உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள்ளாக செலுத்த வேண்டும். மேற் குறிப்பிட்டபடி செலுத்த தவறினால் அவரால் செலுத்தப்பட்ட 25% தொகை முழுவதும் இழக்க நேரிடும். (8) குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைகளுக்குள் மொத்த விற்பனை தொகையும் பெற்றுக் கொண்ட பின்னரே வெற்றி பெற்ற டெண்டர்தாரர் / ஏலதாரருக்கு அதிகாரப்பூர்வ அதிகாரியால் விற்பனை சான்றிதழ் (Sales Certificate) வழங்கப்படும். (9) பத்திரச் செலவு, பதிவு கட்டணம், சட்டப்படியான மற்ற செலவுகளையும் வெற்றிபெற்ற ஏலம் கேட்பவரே ஏற்கவேண்டும். (10) அரசு, அரசு நிறுவனம் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கான சொத்து சம்பந்தப்பட்ட சட்ட பூர்வ வீட்டு வரி, மின்சார கட்டணம் மற்றும் TDS, GST போன்றவற்றை வெற்றிபெற்ற ஏலம் கேட்பவரே செலுத்த வேண்டும். (11) எவ்வித காரணமும் கூறாமல் விலைப்புள்ளிகளை ஏற்க அல்லது நிராகரிக்க அல்லது விற்பனையை ரத்து செய்ய அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு முழு உரிமை உண்டு

இடம் : கும்பகோணம்
தேதி : 16.08.2022

அதிகாரப்பூர்வ அதிகாரி

பதிவு அலுவலகம் : எண்.149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612001, CIN : L65110TN1904PLC001287, போன்: 0435 - 2402322, ஃபேக்ஸ்: 0435 - 2431746, இணையதளம் : www.cityunionbank.com